பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

21 09 2025 7 15

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் பழம்பெருமை வாய்ந்த கடல்சார் பாரம்பரியதை உலகறியச் செய்யும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. நக்சல் தீவிரவாதம் வரும் மார்ச் மாதத்திற்குள் முழுமையாக கட்டுப்படுத்தப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

3. தூர்தர்ஷன் தொலைக்காட்சி சேவையின் தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை பிரசார் பாரதி தலைவர் திரு. நவ்னீத் குமார் சேகல் வலியுறுத்தியுள்ளார்.

4. பாரதிய யுவ மோர்ச்சா சார்பில் நடைபெறும் நமோ இளையோர் ஓட்டத்தில் 10 லட்சம் பேர் பங்கேற்கின்றனர்.

5. 19 வயதுக்குட்பட்டோருக்கான இந்தியா-ஆஸ்திரேலியா இடையேயான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

<<<<>>>>

குஜராத் மாநிலம் லோதல் துறைமுகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் தேசிய கடல்சார் பாரம்பரிய வளாகத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்தவுடன் உலகின் மிகப்பெரிய கடல்சார் அருங்காட்சியகமாக திகழும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அம்மாநிலத்தில் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர், இத்துறைமுகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

நாட்டின் பழம்பெருமை வாய்ந்த கடல்சார் பாரம்பரியத்தை உலகறியச் செய்யும் வகையில் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

சுற்றுலா, ஆராய்ச்சி, கல்வி மற்றும் திறன் மேம்பாடு போன்ற சேவைகளுக்கான மையமாக இந்தியா உருவெடுக்கும் என்றும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டில் நக்சல் தீவிரவாதம் வரும் மார்ச் மாதத்திற்குள் முழுமையாக கட்டுப்படுத்தப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தனியார் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு பேட்டியளித்த அவர், மத்திய அரசு மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகள் காரணமாக தீவிரவாத செயல்கள் 75 சதவீதம் குறைந்துள்ளதாக கூறினார்.

தீவிரவாத செயல்களை கட்டுப்படுத்தும் வகையில் கடந்த 11 ஆண்டுகளில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீட்டு வசதி, மின்சாரம், கழிவறைகள், சமையல் எரிவாயு உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இதற்கென 60 கோடி மக்கள் பயனடையும் வகையில் தலா 5 லட்சம் ரூபாய் மதிப்பிலான உதவிகள் வழங்கப்பட்டு வருவதாக திரு. அமித் ஷா கூறினார்.

<<<<>>>>

இந்தியா-அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தத்தை பரஸ்பரம் இருதரப்புக்கும் பயனளிக்கும் வகையில் இறுதி செய்வது குறித்து அந்நாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த சில நாட்களுக்கு முன்பு இந்திய பிரதிநிதிகள் குழு, அமெரிக்க குழுவுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தக பேச்சுவார்த்தைகளுக்கான முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

இந்நிலையில் மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தலைமையிலான இந்திய பிரதிநிதிகள் குழு நாளை அமெரிக்கா செல்கிறது.

<<<<>>>>

ஆழ்கடல் ஆதார வளங்களை பயன்பாட்டுக்கு கொண்டு வருவதற்காக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மத்திய புவி அறிவியல் அமைச்சகம் மற்றும் சர்வதேச கடல்சார் ஆணையத்துடன் 15 ஆண்டுகால ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஆழ்கடல் பகுதியில் உள்ள கனிம வளங்கள், சுரங்க தொழில்நுட்ப மேம்பாடு, நீலப் பொருளாதாரம் ஆகியவற்றுக்கான முன் முயற்சிகள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமானது என்று திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மலையாள திரைப்பட நடிகர் மோகன் லாலுக்கு தாதா சாகேப் பால்கே விருது அறிவிக்கப்பட்டுள்ளதற்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி. நட்டா மற்றும் மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள பதிவில், இந்திய திரைப்படத் துறைக்கு மோகன்லால் ஆற்றியுள்ள மகத்தான பங்களிப்புக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த விருது கேரள மாநில திரைப்படத் துறைக்குக்கும், நடிகர்களுக்கும் பெரிதும் உத்வேகம் அளிக்கும் என்று திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

பிஜேபி தலைவர் திரு. நட்டா வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், மலையாள திரைப்படத் துறைக்கு அவர் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளதாக கூறியுள்ளார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், இந்திய திரைப்படத் துறையில் அவரது சிறப்பான செயல்பாடுகளுக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த விருது புதுதில்லியில் இம்மாதம் 23ஆம் தேதி நடைபெறும் தேசிய திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில் வழங்கப்பட உள்ளது.

<<<<>>>>

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் அரசுமுறைப் பயணமாக இன்று மொராக்கோ செல்கிறார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதவில், அந்நாட்டுடன் பாதுகாப்பு மற்றும் தொழில்துறை ஒத்துழைப்பு குறித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஆப்பிரிக்காவில் முதல் முறையாக தனியார் நிறுவனத்தால் தொடங்கப்பட உள்ள இந்திய பாதுகாப்பு தளவாட உற்பத்தி தொழிற்சாலையின் தொடக்க விழாவில் அவர் பங்கேற்கிறார்.

பாதுகாப்பு துறையில் சுயசார்பு இந்தியாவிற்கான இலக்குகளை எட்டும் வகையில் பல்வேறு முன் முயற்சிக்ள மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

பாதுகாப்புத்துறையில் தொழில்துறை பயிற்சி மற்றும் தகவல்களைப் பரிமாற்றம் செய்வது தொடர்பான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என எரிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வட ஆப்பிரிக்க நாட்டில் அவர் மேற்கொள்ளும் முதலாவது பயணம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

சரக்கு மற்றும் சேவை வரி தொடர்பான குறைகளுக்கு தீர்வு காணும் வகையில் தேசிய அளவிலான  உதவி எண் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், திருத்தியமைக்கப்பட்ட வரி விகிதங்கள் நாளை முதல் அமலுக்கு வருவதையொட்டி அது தொடர்பான வாடிக்கையாளர்களின் சந்தேகங்களுக்கு பதிலளிக்கும் வகையில் இந்த உதவி எண் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தை நடவடிக்கைகள் சீராக இருப்பதை உறுதி செய்யும் வகையில் ஜி.எஸ்.டி. இணக்க நடைமுறைகள் மற்றும் வரி விகிதங்கள் தொடர்பான வாடிக்கையாளர்களின் சந்தேகங்களுக்கு உடனுக்குடன் பதிலளிக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

வாடிக்கையாளர்கள் தங்களது புகார்களை 17 மொழிகளில் 1 9 1 5 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் அல்லது இதற்கான பிரத்யேக இணையதளம் வாயிலாகவும் தெரிவிக்கலாம் என்று அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

<<<<>>>>

தூர்தர்ஷன் தொலைக்காட்சி சேவையின் தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரசார் பாரதி தலைவர் திரு. நவ்னீத் குமார் சேகல் தெரிவித்துள்ளார்.

ஹைதராபாதில் உள்ள தூர்தர்ஷன் தொலைக்காட்சி நிலையத்தில் ஆய்வு செய்த அவர், பெருவாரியான மக்கள் காணும் வகையில் தொலைக்காட்சி நிகழச்சிகள் ஒளிபரப்ப வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வாயிலாக மக்களுக்கு பல்வேறு தகவல்களை வழங்குவதன் மூலம் நாட்டைக் கட்டமைப்பதற்கான நடவடிக்கைகளுக்கு மக்கள் பங்கேற்பை அதிகரிக்க உதவிடும் என்று அவர் தெரிவித்தார்.

ஒவ்வொருவரும் தங்களது வாழக்கையில் ஏற்றம் பெருவதற்கு குறைந்தபட்சம் 3 மொழிகளையாவது கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் என்று திரு. நவ்னீத் குமார் சேகல் கூறினார்.

<<<<>>>>

பாரதிய யுவ மோர்ச்சா சார்பில் நடைபெறும் நமோ இளையோர் ஓட்டத்தில் நாடு முழுவதும் 10 லட்சம் பேர் பங்கேற்கின்றனர்.

நாடு முழுவதும் 100 நகரங்களில் நடைபெறும் இந்த ஓட்டத்தில் ஒவ்வொரு இடத்திலும் 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் இளைஞர்கள் பங்கேற்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

அசாம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா மற்றும் தெலங்கானா மாநிலங்களின் ஒருசில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மத்தியப்பிரதேசம், மேற்குவங்கம், சிக்கிம், பீஹார், கிழக்கு உத்தரப்பிரதேசம், கிழக்கு ராஜஸ்தான் உள்ளிட்ட பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

ஆந்திரா, கர்நாடகா, ஜார்கண்ட், ஒடிசா, சிக்கிம் மற்றும் அந்தமான் நிகோபார் தீவுகளில் அடுத்த 3 முதல் 4 நாட்களுக்கு இடி மின்னலுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

19 வயதுக்குட்பட்டோருக்கான இந்தியா-ஆஸ்திரேலியா இடையேயான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

பிரிஸ்பேனில் இப்போட்டி காலை மணி 9.30க்கு தொடங்குகிறது.

-------------

ஆசியக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் சூப்பர்-4 சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

துபாயில் இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

நேற்று நடைபெற்ற இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் 4 விக்கெட் வித்தியாசத்தில் பங்களாதேஷ் வெற்றி பெற்றது.

---------------

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை இன்று தென் கொரிய இணையை எதிர்கொள்கிறது.

ப்ரோ கபடி லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் பட்னா - தில்லி அணியையும், ஹரியானா - தமிழக அணியையும் வென்றன.

<<<<The End>>>>